Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

வாரம் - 32

பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்

தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

தரம்: 11

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க
- இவை இலக்கணஅறிவை அதிகரிப்பதற்காக உருவாக்கப்பட்ட பயிற்சியாகும்

---

பகுதி 1

1. சுடுகாட்டை நன்காடு என கூறுவது
   (1) மரூஉ (2) மங்கலம் (3) இடக்கரடக்கல் (4) குழூஉக்குறி
2. பின்வருவனவற்றுள் தற்காலத்தமிழில் மொழி இறுதியில் வராத உயிர்எழுத்து
   (1) ஐ (2) ஆ (3) ஓ (4) எ
3. தனது மாத்திரையில் கூடியும் குறைந்தும் ஒலிக்கும் எழுத்துகள்
   (1) ஆய்தம் (2) வல்லினம் (3) இடையினம் (4) உயிர்க்குறில்
4. பின்வருவனவற்றுள் நெடில்தொடர் குற்றியலுகரமாய் அமைவது
   (1) வாயாடு (2) ஆடு (3) பயறு (4) பாலாறு
5. தமிழில் உள்ள உயிர்மெய் குறில்களின் எண்ணிக்கை
   (1) 126 (2) 95 (3) 90 (4) 133

பகுதி 2

01. பின்வரும் பாடல்களை படித்து அதன் கீழ் வரும் வினாக்களுக்கு விடை தருக

1. அணிந்து வரும் சமரில் அரவு உயர்ந்தோனுடன் அரசர் உடலம் எல்லாம் துணிந்து இரண்டு பட
   பொருது தொல்லை உலகு அரசு ஆள துணிவது அல்லால் தணிந்து அறமும் கிளை உறவும்
   கொண்டாடி தான் இன்னம் தனி தூது ஏவி பணிந்து இரந்து புவி பெற்று உண்டு
   இருப்பதற்கே துணிகின்றான் பட்ட பாடே

   1. அரவுயர்ந்தோன் என குறிப்பிடப்படுபவன் யார்?
   2. வீமனின் சினம் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?

2. போர் முடித்தான் அமர் பொருது புலம்பு உறு பாஞ்சாலி பூ தண் கூந்தல்
   கார் முடித்தான் இளையோர் முன் கழறிய வஞ்சினம் முடித்தான் கடவுள் கங்கை
   நீர் முடித்தான் இரவு ஒழித்த நீ அறிய வசை இன்றி நிலை நின்று ஓங்கும்
   போர் முடித்தான் இப்படியே யார் முடித்தான் இவனுடனே பிறப்பதே நான்

   1. கிருட்டினன் சிறப்பு எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?
   2. தர்மன் எவற்றை செய்வதாக வீமன் குறிப்பிடுகின்றான்?

02. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக
   1. தமிழ்ப்பண்பாடு என்ற கட்டுரையில் “உலகமனப்பான்மை” பற்றி கூறப்பட்டவற்றை சுருக்கமாக விபரிக்குக
   2. கிருட்டினன் தூதுச்சருக்கத்தில் தர்மன் தனது சமாதானத்தின் மீதான விருப்பினை எவ்வாறு எடுத்துக்காட்டுகின்றான்?